**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குமாரபாளையம்</u>**

**முன்னிலை :** செல்வி.T.நவீனா, B.Com. LL.B. (Hons.),

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி

குமாரபாளையம்.

2026-ம் ஆண்டு ஜீன் திங்கள் 29-ம் நாள், திங்கட்கிழமை

<u>அசல் வழக்கு எண். 83/2020</u>

<u>(அ.வ.எண்.187/2018, DM Tiruchengode)</u>

**<u>CNR: TNNM15-000218-2020</u>**

R. துளசி (எ) துளசிமணி ... வாதி

**// எதிராக//**

1. K. காளியண்ணன் (இறந்தவர்)

2. K. சக்திவேல்

3. சார்பதிவாளர்,

சார்பதிவாளர் அலுவலகம், கொமாரபாளையம்,

கொமாரபாளையம் தாலூக்கா

4. இந்திராணி

5. ராதிகா ... பிரதிவாதிகள்

(Amended as per order in IA.No:05/2025 Dated: 07.11.2025)

இவ்வழக்கு என் முன்னர் 24.06.2026 அன்று இறுதியான விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு, வாதிகள் தரப்பில் கற்றறிந்த



NAVEENA T
Digitally signed by NAVEENA T
Date: 2026.06.29 18:20:03 +0530

வழக்கறிஞர் திரு. T. தர்மலிங்கம் அவர்கள் ஆஜராகியும், 2ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. K. உதயகுமார் அவர்கள் ஆஜராகியும், பின்னிட்டு பிரதிவாதிகளை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகத காரணத்தினால் தோன்றா தரப்பினர்களாக்கப்பட்டுள்ளனர். 3–பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் திரு. S. செந்தில்குமார் அவர்கள் ஆஜராகியும், மற்றும் 1ம் பிரதிவாதி இறந்து விட்டார், 4 மற்றும் 5ம் பிரதிவாதிகள் நீதிமன்ற அழைப்பாணையை பெற்றுக்கொண்டு நீதிமன்றத்தில் அழைத்து ஆஜராகத காரணத்தினால் தோன்றாதரப்பினர்களாக்கப்பட்டும் வழக்குரை, எதிர்வழக்குரைகள், இருதரப்பு வழக்காவணங்கள், வாதுரைகள் மற்றும் இவ்வழக்கில் விசாரிக்கப்பட்ட சாட்சிய, சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்தும். இதுநாள் வரையில் இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## <u>தீர்ப்புரை</u>

இவ்வழக்கானது, வாதியும் 1ம் பிரதிவாதியும் 18.02.1983ம் தேதியில் எழுதி கொண்ட கிரைய ஆவண எண்.343/1983ல் சொத்து விபரத்தில்,



NAVEENA T
Digitally signed by NAVEENA T
Date: 2026.06.29 18:20:10 +0530

பழைய சர்வே எண்.183/1 என இருப்பதை, ச.எண்.183/6J1 என திருத்தம் செய்து, 2, 4, 5 பிரதிவாதிகள் பிழை திருத்தல் பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டியும், திருத்தம் செய்த பிழை திருத்தல் பத்திரத்தை 3ம் பிரதிவாதி தமது அலுவலகத்தில் பதிவு செய்து தர செயலுறுத்துக் கட்டளை பிறப்பிக்க வேண்டியும், தாவா செலவு தொகை கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. <u>வாதிகள் தரப்பு வழக்குரையின் சுருக்கம்:–</u>**

1.1. தாவா சொத்தானது 18.02.1983ம் தேதியிட்டு கிரைய ஆவண எண்.343/1983 மூலம் 1–ம் பிரதிவாதி வாதிக்கு, வாதியின் கணவருக்கும் எழுதிக்கொடுத்த கிரைய பத்திரத்தின் படி பாத்தியப்பட்டது ஆகும். வாதியின் கணவர் கடந்த 13.02.1984 அன்று இறந்து விட்டார். மேற்படி கிரைய தேதியிலிருந்து, வாதி மேற்படி கிரயத்தின் படி பாத்தியப்பட்ட சொத்துக்களை சர்வ சுதந்திரமாய் அனுபவம் செய்து வருகிறார். மேற்படி ஆவண எண்.343/1983–ல் சொத்து விவரத்தில் நான்கு எல்லைகள் சரியாக குறிப்பிடப்பட்டு, சர்வே



NAVEENA T
Digitally signed by NAVEENA T
Date: 2026.06.29 18:20:16 +0530

எண்.183/1 என எழுதப்பட்டுள்ளது, ஆனால், சர்வே எண்.183/6J1 என எழுதப்பட்டிருக்க வேண்டும்.

1.2. வாதி கடந்த 28.02.2017–ம் தேதியில் தாவா சொத்திற்கு பட்டா மாறுதல் செய்ய குமாரபாளையம் வட்டாட்சியரிடம் மனு செய்தபோதுதான் மேற்படி பத்திரத்தில் சர்வே எண் பிழையாக உள்ளது என்பது வாதிக்கு தெரியவந்தது. இது சம்பந்தமாக 1,2 ம் பிரதிவாதிகளிடம் நேரில் சென்று பிழை திருத்தல் பத்திரம் எழுதித் தர கேட்டபோது, அவர்கள் சர்வே எண் மாற்றி எழுதி தர சம்மதித்தார். ஆனால், 3ம் பிரதிவாதி, பத்திரம் பதிவு செய்யப்பட்ட தேதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள் மட்டுமே பிழை திருத்தல் பத்திரம் எழுத முடியும் என்றும் தற்போது பிழை திருத்தல் பத்திரம் பதிவு செய்ய இயலாது என்றும் நீதிமன்றத்தில் தாவா தாக்கல் செய்து, நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தால் மட்டுமே பிழை திருத்தல் பத்திரம் எழுதிக் கொள்ள இயலும் என்றும் கூறிவிட்டார். இதனால், வாதிக்கு தன்னுடைய சொத்திற்கு பட்டா மாறுதல் செய்ய இயலாமல் போய்விட்டது. எனவே, 2, 4, 5 பிரதிவாதிகள் சொத்து விவரத்தில் சர்வே



NAVEENA T
Digitally signed by NAVEENA T
Date: 2026.06.29 18:20:22 +0530

எண்.183/1 என இருப்பதை புதிய சர்வே எண்.183/6J1 என திருத்தம் செய்து பிழை திருத்தல் பத்திரம் வாதிக்கு எழுதிக்கொடுக்கவும், 3ம் பிரதிவாதி அதை பதிவு செய்ய, செயல் உறுத்துக்கட்டளை பிறப்பிக்கக் கோரியும், இந்த வழக்கை வாதி தாக்கல் செய்துள்ளார்கள்.

2. **<u>1, 2ம் பிரதிவாதி எதிர்வழக்குரையின் சுருக்கம் பின்வருமாறு</u>:-**

2.1. 1, 2 பிரதிவாதிகளால் உண்மையென ஒப்புக்கொண்ட சங்கதிகள் தவிர வாதிகள் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் மறுக்கப்படுகின்றன. வாதி கோரியுள்ள முதலாவது பரிகாரமான புல.எண்.183/1 என்பதை புல எண்.183/6J1 என பிழை திருத்தல் பத்திரம் எழுதி கொடுக்க கோர எவ்வித தார்மீக உரிமையோ, சட்ட நடைமுறையோ கிடையாது. அவ்வாறு, பிழை திருத்தல் பத்திரம் எழுதி கொடுக்க கோரும் சொத்தானது வாதிக்கு எவ்வகையில் பாத்தியப்பட்டது என விளம்புகை பரிகாரம் கோராமல் இவ்வழக்கு நிலைக்கதல்ல. தாவா சொத்தாக குறிப்பிடப்பட்ட புல எண். 183/1 விஸ்தீரணம் 1955 சதுரடி கொண்ட நிலம் மற்றும் மேற்படி நிலத்திற்கு காட்டப்பட்ட நான்குபுற எல்லைக்கும், தற்போது வாதி பிழை திருத்தல்



NAVEENA T Digitally signed by NAVEENA T Date: 2026.06.29 18:20:28 +0530

பத்திரம் எழுதி கொடுக்க கோரும் பத்திரம் புல எண்.183/6J1 எவ்வித தொடர்பும், சம்மந்தமும் கிடையாது. இந்நிலையில் வாதி புல எண்.183/1 எண்ணில் 1955 சதுரடி கிரையம் பெற்ற நிலத்திற்கு சரியான புல எண்.183/6J1 என கோருவது தவறு.

2.2. வாதி கடந்த 18.02.1983 அன்று கிரையம் பெற்றதாக கூறப்படும் ஆவணமானது, நடைமுறைபடுத்தப்படாத ஒரு ஆவணம் ஆகும். மேற்படி கிரைய ஆவணத்தில் கண்டுள்ள புல எண், நான்கு எல்லைகள், அதன் விஸ்தீர்ணம் பூஸ்துதியில் இல்லாத ஒன்றாகும். காரணம் 1983–ம் ஆண்டில் 1–ம் பிரதிவாதி, வாதியிடம் ரூ.10,000/– கடன் பெற்ற சமயத்தில் கடனுக்கு ஆதரவாக எழுதிக்கொடுக்கப்பட்ட ஆவணம் ஆகும். மேற்படி ஆவணத்தின் அடிப்படையில் வாதி எவ்வித உரிமையோ, பாத்தியத்தையோ கொண்டிருக்கவில்லை. வாதி தாவா சொத்தின் அனுபவத்தில் இருந்து வருகிறார் என்பது முற்றிலும் தவறாகும். வாதி அவரது அனுபவத்தை நிரூபிக்க எவ்வித ஆவணமும் சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. மேலும் தாவா சொத்து பூஸ்துதியில் இல்லாத ஒன்றாகும்.



NAVEENA T
Digitally signed by NAVEENA T
Date: 2026.06.29 18:20:35 +0530

2.3. வாதி தாவாவில் கோரும் இரண்டாவது பரிகாரமான, குமாரபாளையம் சார்பதிவாளர் அவர்கள் மூலம் பிழைதிருத்தல் பத்திரத்தை பதிவு செய்து தர செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் ஆனது, வாதிக்கு 18.02.1983 தேதியிட்ட ஆவண எண்.343/1983–ன் அடிப்படையில் எவ்வித உரிமையும் ஏற்படாத நிலையில், அதன் தொடர்ச்சியாக, பிழை திருத்தல் பத்திரம் எழுதி தர கோரவும், அதனை சார்பதிவாளர் பதிவு செய்ய கோருவதும் சட்டப்படி ஏற்புடையதல்ல. இவ்வழக்கில் மூன்றாம் பிரதிவாதி தேவையற்ற தரப்பினர்.

2.4. புல எண்.183/6J1 என்பது பட்டா எண்.2168–ன் படி ரங்கசாமி கவுண்டர் மகன் செங்கோடன், ரங்கசாமி கவுண்டர் மகன் சின்னுசாமி, தங்கவேல் மகன் தங்கமணி என கூட்டு பட்டாவாக தாக்கலாகியுள்ளது. நாளது தேதி வரை மேற்படி புல எண். 183/6J1–ல் எவ்வித உட்பிரிவும் செய்யப்படவில்லை. இந்நிலையில் வாதி மேற்படி புல எண். புல எண்.183/6J1 என திருத்தம் செய்ய கோருவது எவ்வகையிலும் ஏற்புடையதல்ல. இந்த தாவா நிலைக்கதக்கதல்ல. புல எண்.183/6J1 பொறுத்து வாதி பரிகாரம் கோரும் பட்சத்தில் அனைத்து



NAVEENA T
Digitally signed by NAVEENA T
Date: 2026.06.29 18:20:41 +0530

கூட்டு பட்டாதாரரையும் இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கப்படுதல் வேண்டும். அவ்வாறு பட்டா எண்.2168–ன் படி ரங்கசாமி கவுண்டர் மகன் செங்கோடன், ரங்கசாமி கவுண்டர் மகன் சின்னுசாமி, தங்கவேல் மகன் தங்கமணி ஆகியோர் அனைவரையும் வழக்கில் தரப்பினராக சேர்க்காத நிலையில் இவ்வழக்கு உரிய நபர்களை தரப்பினராக சேர்க்காத காரணத்தால் வழக்கு தள்ளுபடிக்கு உகந்ததாகும்.

2.5. வாதி புல எண்.183/1–யை புல எண். 183/6J1 என திருத்தம் செய்ய கோரியுள்ள நிலையில், வாதிக்கு புல எண்.183/6J1–ல் நிலம் பாத்தியப்பட்டு அனுபவத்தில் இருந்து வந்தது என்பதை ருசு செய்ய எவ்வித ஆவணமும் வாதி தாக்கல் செய்யவில்லை. மேலும் வாதி தற்போது உரிமை கோரும் புல எண். 183/6J1 பொறுத்து தமக்கு உரிமை உள்ளது என உரிய நீதிமன்ற கட்டணம் செலுத்தி விளம்புகை பரிகாரம் கோரியிருக்க வேண்டும். அவ்வாறு விளம்புகை பரிகாரம் கோராத நிலையில் இந்த தாவா நிலைக்கதக்கதல்ல.

2.6. தாவாவிற்கு எவ்வித முகாந்தரமோ, வழக்கு மூலமோ கிடையாது, உரிய நீதிமன்ற கட்டணம் செலுத்தப்படவில்லை. வாதி



NAVEENA T
Digitally signed by NAVEENA T
Date: 2026.06.29 18:20:46 +0530

வழக்குரையில் தாவா சொத்தின் மதிப்பு ரூ.5,000/- என காட்டி அதற்கு நீதிமன்ற கட்டண சட்டப்பிரிவு 50-ன் கீழ் தொடரப்பட்ட வழக்கானது முற்றிலும் தவறானது. மதிப்பீடும் தவறானது, செலுத்தப்பட்ட நீதிமன்ற கட்டணமும் தவறானது. தாவாவில் விவரிக்கப்பட்டுள்ள சொத்து விபரம் தவறானது. தாவாவில் கோரியுள்ள பரிகாரத்தை பெற வாதிக்கு எவ்வித அடிப்படை தார்மீக உரிமையும் கிடையாது. எனவே, மேற்படி தாவாவினை தள்ளுபடி செய்யுமாறு பிரதிவாதிகள் வேண்டிக்கொண்டனர்.

3. <u>3ம் பிரதிவாதி எதிர்வழக்குரையின் சுருக்கம் பின்வருமாறு</u>:-

**3.1.** 3-ம் பிரதிவாதியால் உண்மையென ஒப்புக்கொண்ட சங்கதிகள் தவிர வாதிகள் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் மறுக்கப்படுகின்றன. வாதிகள் கிரைய பத்திரத்தை பதிவு செய்த போது தாவா சொத்திற்கான சரியான சர்வே எண்.183/6J1 என்றும், அது தவறுதலாக சர்வே எண்.183/1 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை நிரூபணம் செய்ய எந்த ஒரு சான்றாவணங்களையும் சமர்ப்பிக்கவில்லை. **வாங்குபவனே விழித்திரு என்பது சட்டம்.** தாவா



NAVEENA T Digitally signed by NAVEENA T Date: 2026.06.29 18:20:52 +0530

சொத்தை கிரையம் பெறுவதற்கு முன்பு, அதற்குண்டான வருவாய் ஆவணங்களையும் இதர ஆவணங்களையும் பரிசீலனை செய்வது வாதிகளின் கடமையாகும். அவ்வாறு பரிசீலனை செய்யாமல் கிரையப் பத்திரத்தை பதிவு செய்துவிட்டு, வாதி தற்போது சுமார் 35 வருடங்கள் பின்னிட்டு தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல .

3.2. வாதியின் கணவரும் தாவா சொத்தை கிரயம் பெற்றுள்ளதால் அவர் வழக்கிற்கு அவசிய தரப்பினர் ஆவார். தாவாவிற்கான மதிப்பீடும் தவறானது, நீதிமன்ற கட்டணமும் தவறாக செலுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு முத்திரை தீர்வை சட்டம், பிரிவு 47–B–ன் படி, உரிமை மாற்றம் செய்பவரும் உரிமை பெறுபவரும் திருத்தம் செய்ய வேண்டிய பத்திரத்தை தாக்கல் செய்து, அன்றைய சந்தை மதிப்பிற்கு, முன்பு செலுத்திய தீர்வைக் கழித்தது போக, மீதம் முத்திரை தீர்வை மற்றும் பதிவு கட்டணத்தை செலுத்தி இருக்க வேண்டும். ஆனால், வாதி அவ்வாறு கட்டணம் எதுவும் செலுத்தவில்லை.

3.3. உரிமையியல் நடைமுறை சட்டம் பிரிவு 80–ன் படி தாவா தாக்கல் செய்வதற்கு முன்பு, வாதி அரசுக்கு சட்ட அறிவிப்பு



NAVEENA T
Digitally signed by NAVEENA T
Date: 2026.06.29 18:21:01 +0530

வழங்காததால், தாவா தள்ளுபடி செய்யத்தக்கது ஆகும். வாதி நாமக்கல் மாவட்ட ஆட்சியர், பதிவுத்துறையின் தலைமைப் பதிவாளர், சென்னை மற்றும் நாமக்கல் மாவட்ட பதிவாளர், நாமக்கல் ஆகியோரை வழக்கின் தரப்பினராக சேர்க்காது தான் இவ்வழக்கு அவசிய தரப்பினர்களை சேர்க்காததன் அடிப்படையில் தள்ளுபடி செய்யத் தக்கதாகும். இவ்வழக்கிற்கு வழக்குமூலமில்லை. தாவா சொத்தானது தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, இப்பிரதிவாதி வழக்கை தள்ளுபடி செய்யுமாறு வேண்டிக் கொண்டார்.

4. **ISSUES:-**

வழக்குரை, எதிர்வழக்குரை, ஆவணங்கள் ஆகியவற்றை பரிசீலித்ததன் அடிப்படையில் 07.11.2023-ம் தேதியில் இவ்வழக்கை தீர்மானிக்க கீழ்கண்ட எழுவினக்கள் வனையப்பட்டுள்ளன:

**எழுவினாக்கள்:**

1. 18.02.1983 ம் தேதிய ஆவண எண்.343/1983 கிரையப்பத்திரத்தின் சொத்து விபரத்தில் சர்வே எண்.183/1 என இருப்பதை சர்வே எண்.183/6J1 என திருத்தம் செய்யப்பட வேண்டுமா?



NAVEENA T Digitally signed by NAVEENA T Date: 2026.06.29 18:21:11 +0530

2. வாதிக்கு 1,2 பிரதிவாதிகள் பிழைதிருத்தல் பத்திரம் எழுதிக் கொடுக்க கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதா?

3. வாதி கோரியுள்ள செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் கிடைக்கதக்கதா?

4. புல எண்.183/6J1 பொருத்து உரிமை விளம்புகை கோராமல் தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கதக்கதல்ல என்பது சரியா?

5. அவசிய தரப்பினரை சேர்க்காத காரணத்தால் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளதா?

6. சொத்து விபரம் சரியானதா?

<u>மாற்றியமைக்கப்பட்ட எழுவினாக்கள்:</u>

1. 18.02.1983 ம் தேதிய ஆவண எண்.343/1983 கிரையப்பத்திரத்தின் சொத்து விபரத்தில் சர்வே எண்.183/1 என இருப்பதை சர்வே எண்.183/6J1 என திருத்தம் செய்யப்பட வேண்டுமா?

2. வாதிக்கு 1,2 பிரதிவாதிகள் பிழைதிருத்தல் பத்திரம் எழுதிக் கொடுக்க கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதா?



NAVEENA T
Digitally signed by NAVEENA T
Date: 2026.06.29 18:21:17 +0530

3. வாதி கோரியுள்ள செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் கிடைக்கதக்கதா?

4. புல எண்.183/6J1 பொருத்து உரிமை விளம்புகை கோராமல் தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கதக்கதல்ல என்பது சரியா?

5. அவசிய தரப்பினரை சேர்க்காத காரணத்தால் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளதா?

6. இருதரப்பினர்களுக்கும் கிடைக்கத்தக்க வேறு பரிகாரங்கள் என்ன?

**5. <u>இரு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் விபரம்:</u>**

வாதிகள் தரப்பில், வாதியை வா.சா.1 மற்றும் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. 18.02.1983 தேதியிட்ட கிரைய ஆவணம் எண்.343/1983 வா.சா.ஆ.1 ஆகவும், ராஜவேலு என்பவரின் இறப்பு சான்றிதழ் வா.சா.ஆ.2 ஆகவும், குடும்ப அட்டை வா.சா.ஆ.3 ஆகவும்,



NAVEENA T
Digitally signed by NAVEENA T
Date: 2026.06.29 18:21:23 +0530

ஆதார் அடையாள அட்டை வா.சா.ஆ.4 ஆகவும், ராஜவேலு என்பவரது வாரிசு சான்றிதழ் வா.சா.ஆ.5 ஆகவும், குறியீடு செய்யப்பட்டுள்ளன.

பிரதிவாதி தரப்பில் பி.சா.1 விசாரிக்கப்பட்டு பி.சா.ஆ.1 மற்றும் பி.சா.ஆ.2 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. அதிகாரக் கடிதம் பி.சா.ஆ.1 ஆகவும், மற்றும் அடையாள அட்டை பி.சா.ஆ.2 ஆகவும், குறியீடு செய்யப்பட்டுள்ளன.

6. <u>பிரச்சனைகளுக்குக்கான தீர்வு:</u>

6.1. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. வாதியின் வழக்கு யாதெனில், தாவா சொத்தானது 1–ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த வா.சா.ஆ.1–ன் படி வாதிக்கும், வாதியின் கணவருக்கும் பாத்தியப்பட்டது என்றும், வாதியின் கணவர் கடந்த 13.02.1984 அன்று இறந்து விட்டார் (வா.சா.ஆ.2) என்றும், மேற்படி கிரைய தேதியிலிருந்து, வாதி கிரைய சொத்துக்களை சர்வ சுதந்திரமாய் அனுபவம் செய்து வருகிறார் என்றும், வா.சா.ஆ.1–ன் சொத்து விவரத்தில் நான்கு எல்லைகள் சரியாக குறிப்பிடப்பட்டு, சர்வே எண்.183/6J1 என்று குறிப்பிடுவதற்கு பதிலாக



NAVEENA T
Digitally signed by NAVEENA T
Date: 2026.06.29 18:21:31 +0530

சர்வே எண்.183/1 என எழுதப்பட்டுள்ளது என்றும், வாதி கடந்த 28.02.2017–ம் தேதியில் தாவா சொத்திற்கு பட்டா மாறுதல் செய்ய குமாரபாளையம் வட்டாட்சியரிடம் மனு செய்தபோதுதான் மேற்படி பத்திரத்தில் சர்வே எண் பிழையாக உள்ளது என்பது வாதிக்கு தெரியவந்தது என்றும், இது சம்பந்தமாக 1,2 பிரதிவாதிகளிடம் நேரில் சென்று பிழை திருத்தல் பத்திரம் எழுதித் தர கேட்டபோது, அவர்கள் சர்வே எண் மாற்றி எழுதி தர சம்மதித்தார்கள் என்றும், 3ம் பிரதிவாதி, பத்திரம் பதிவு செய்யப்பட்ட தேதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள் மட்டுமே பிழை திருத்தல் பத்திரம் எழுத முடியும் என்றும் தற்போது பிழை திருத்தல் பத்திரம் பதிவு செய்ய இயலாது என்றும் நீதிமன்றத்தில் தாவா தாக்கல் செய்து, நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தால் மட்டுமே பிழை திருத்தல் பத்திரம் எழுதிக் கொள்ள இயலும் என்றும் கூறிவிட்டார் என்றும், எனவே, 2, 4, 5 பிரதிவாதிகள் வா.சா.ஆ.1–ன் சொத்து விவரத்தில் சர்வே எண்.183/1 என இருப்பதை புதிய சர்வே எண்.183/6J1 என திருத்தம் செய்து பிழை திருத்தல் பத்திரம் வாதிக்கு எழுதிக்கொடுக்கவும், 3ம் பிரதிவாதி அதை பதிவு செய்ய செயல்



NAVEENA T
Digitally signed by NAVEENA T
Date: 2026.06.29 18:21:38 +0530

உறுத்துக்கட்டளை பிறப்பிக்கக் கோரியும், இந்த வழக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6.2. 1, 2 பிரதிவாதிகள் தரப்பில், தாவா சொத்தானது வாதிக்கு எவ்வகையில் பாத்தியப்பட்டது என விளம்புகை பரிகாரம் கோராமல் இவ்வழக்கு நிலைக்கதல்ல என்றும், தாவா புல எண். 183/1–ன் 1955 சதுரடி விஸ்தீரணம் கொண்ட நிலம் மற்றும் அதன் நான்கு புற எல்லைக்கும் புல எண்.183/6J1 எவ்வித தொடர்பும், சம்மந்தமும் கிடையாது என்றும், வா.சா.ஆ.1–ஆனது 1983–ம் ஆண்டில் 1–ம் பிரதிவாதி, வாதியிடம் ரூ.10,000/– கடன் பெற்ற சமயத்தில் கடனுக்கு ஆதரவாக எழுதிக்கொடுக்கப்பட்ட நடைமுறை படுத்தப்படாத ஆவணம் என்றும், வாதி தாவா சொத்தின் அனுபவத்தில் இல்லை என்றும், அவரது அனுபவத்தை நிரூபிக்க எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றும், வாதிக்கு வா.சா.ஆ.1–ன் அடிப்படையில் எவ்வித உரிமையும் ஏற்படாத நிலையில், அதன் தொடர்ச்சியாக 3–ம் பிரதிவாதிக்கு எதிராக செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றும், புல எண்.183/6J1–ற்கான கூட்டு



NAVEENA T
Digitally signed by NAVEENA T
Date: 2026.06.29 18:21:44 +0530

பட்டாதாரரைகளை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்க வேண்டும் என்றும், வாதிக்கு புல எண்.183/6J1—ல் நிலம் பாத்தியப்பட்டு அனுபவத்தில் இருந்து வந்தது என்பதை ருசு செய்ய எவ்வித ஆவணமும் வாதி தாக்கல் செய்யவில்லை என்றும், புல எண். 183/6J1—ல் தமக்கு உரிமை உள்ளது என விளம்புகை பரிகாரம் கோரியிருக்க வேண்டும் என்றும், எனவே, தாவா தள்ளுபடி செய்ய வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

6.3. 3—ம் பிரதிவாதி தரப்பில், வாதிகள் கிரைய பத்திரத்தை பதிவு செய்த போது தாவா சொத்திற்கான சரியான சர்வே எண்.183/6J1 என்றும், அது தவறுதலாக சர்வே எண்.183/1 என்று குறிப்பிடப்பட்டது என்று நிரூபணம் செய்ய எந்த ஒரு சான்றாவணங்களையும் சமர்ப்பிக்கவில்லை என்றும், வாதி தாவா சொத்திற்குண்டான வருவாய் ஆவணங்களையும் இதர ஆவணங்களையும் கிரையம் பெறுவதற்கு முன்பு பரிசீலனை செய்யாமல் கிரையப் பத்திரத்தை பதிவு செய்துவிட்டு, தற்போது சுமார் 35 வருடங்கள் பின்னிட்டு தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும், வாதியின் கணவரும்



NAVEENA T
Digitally signed by NAVEENA T
Date: 2026.06.29 18:21:49 +0530

வழக்கிற்கு அவசிய தரப்பினர் என்றும், வாதி தமிழ்நாடு முத்திரை தீர்வை சட்டம், பிரிவு 47–B–ன் படி, திருத்தம் செய்ய வேண்டிய பத்திரத்தை தாக்கல் செய்து, அன்றைய சந்தை மதிப்பிற்கு முத்திரை தீர்வை செலுத்தவில்லை என்றும், உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 80–ன் படி அரசுக்கு சட்ட அறிவிப்பு வழங்கவில்லை என்றும், நாமக்கல் மாவட்ட ஆட்சியர், பதிவுத்துறையின் தலைமைப் பதிவாளர், சென்னை மற்றும் நாமக்கல் மாவட்ட பதிவாளர் ஆகியோர் அவசிய தரப்பினர் என்றும், எனவே, தாவா தள்ளுபடி செய்ய வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

6.4. எலந்தகுட்டை கிராமம் சர்வே எண் 183/1–ல் 0.96 ஏக்கரில் NH ரோட்டிற்கும் மேற்கு, 20 அடி டவர் ரோட்டில் கிழக்கு, சின்னப்ப கவுண்டர் விற்ற சொத்திற்கும் தெற்கு, பழனிசாமி காலி இடத்திற்கும் வடக்கு, இதன் மத்தியில் 1955 சதுரடி நிலம் தாவா சொத்தாக குறிப்பிடப்பட்டுள்ளது. வாதியின் வழக்கினை நிரூபணம் செய்ய வேண்டி வாதி வா.சா.1 ஆகவும், வா.சா.1 மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டு,



NAVEENA T
Digitally signed by NAVEENA T
Date: 2026.06.29 18:21:55 +0530

எலந்தகுட்டை கிராம நிர்வாக அலுவலர் அவர்கள் வா.சா.2 ஆகவும் விசாரணை செய்யப்பட்டுள்ளனர். 1, 2, 4, 5 பிரதிவாதிகள், தரப்பில் சாட்சியங்கள் எதுவும் முன்வைக்கப்படவில்லை, 1–ம் பிரதிவாதியின் இறப்பிற்கு பின்னிட்டு, 2, 4 மற்றும் 5–ம் பிரதிவாதிகளுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. 3–ம் பிரதிவாதி பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, பி.வா.சா.1 மூலம் பி.வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.2 சான்றாவனங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

7. **<u>எழுவினா எண்கள்.1, 2–ற்கான தீர்வு</u>**:–*18.02.1983 ம் தேதிய ஆவண எண்.343/1983 கிரையப்பத்திரத்தின் சொத்து விபரத்தில் சர்வே எண்.183/1 என இருப்பதை சர்வே எண்.183/6J1 என திருத்தம் செய்யப்பட வேண்டுமா? வாதிக்கு 1,2 பிரதிவாதிகள் பிழை திருத்தல் பத்திரம் எழுதிக் கொடுக்க கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதா?* 1,2 எழுவினாக்கள் பொறுத்து தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதிகள் யாதெனில், வா.சா.ஆ.1–ன் படி வாதி தாவா சர்வே எண்.183/6J1–ல் சொத்தை 1,2 பிரதிவாதிகளிடமிருந்து கிரயம் பெற்றுள்ளார்களா என்றும், அவ்வாறு கிரயம் பெற்ற சொத்து வா.சா.ஆ.1–ல் சர்வே



NAVEENA T
Digitally signed by NAVEENA T
Date: 2026.06.29 18:22:01 +0530

எண்.186/1 என தவறாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றும், அவ்வாறு கிரயம் பெற்ற சொத்துக்கான சரியான சர்வே எண்.183/6J1 தானா என்றும், அதனை பொறுத்து 1, 2 பிரதிவாதிகள் பிழை திருத்தல் பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டுமா என்பதே ஆகும். வா.சா.1–ஆக விசாரிக்கப்பட்ட வாதி, வாதியும் அவரது கணவரும் 1,2 பிரதிவாதிகளிடமிருந்து தாவா சொத்தை கிரயம் பெற்றதாகவும் மேற்படி வா.சா.ஆ.1 கிரைய பத்திரத்தில் சர்வே எண்.183/6J1 ஆனது சர்வே எண்.183/1 ஆக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் சாட்சியளித்துள்ளார். 1,2 பிரதிவாதிகளிடமிருந்து, வாதியும் அவரது கணவரும் கிரயம் பெற்ற 18.02.1983 தேதியிட்டு கிரைய பத்திரமானது வா.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1–ஐ பரிசீலினை செய்கையில், வாதி மற்றும் அவரது கணவர் ராஜவேல் என்பவர் 1, 2 பிரதிவாதிகளிடமிருந்து சர்வே எண்.183/1–ல் உள்ள நான்கு செக்குபந்திகளுக்கு உட்பட்ட 1955 சதுரடி நிலமான தாவா சொத்தினை கிரயம் பெற்றுள்ளார்கள் என்று தெரிய வருகிறது.



NAVEENA T Digitally signed by NAVEENA T Date: 2026.06.29 18:22:08 +0530

7.1. வா.சா.2 ஆக விசாரிக்க பட்டுள்ள எலந்தக்குட்டை கிராம நிர்வாக அலுவலர் அவர்கள்,

"183/1 நிலத்தை நேரில் பார்வையிட்டேன். சர்வே எண் 183/1–ல் மனுதாரரின் நிலம் தற்போதைய சர்வே எண்.183/6J1–ல் அமைந்துள்ளது. மனுதாரர் நிலமான சர்வே எண்.183/6J1 தற்போதைய செக்குபந்தி 20 அடி ரோட்டிற்கும் கிழக்கு, NH ரோட்டிற்கும் மேற்கு, சுரேஷ் பூமிக்கும் வடக்கு, குருசாமி பூமிக்கும் தெற்கு ஆகும்."

என்று சாட்சியமளித்துள்ளார். வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்கையில், வாதி தரப்பில் தாவா சொத்திற்கான முந்தைய மூல ஆவணங்கள் எதையும் வாதி தாக்கல் செய்யவில்லை என்று தெரிய வருகிறது. மேலும், சர்வே எண்.183/1–ற்கான பட்டா முதலான வருவாய்த்துறை ஆவணங்களையோ, சர்வே எண்.183/6J1–ற்கான பட்டா முதலான வருவாய்த்துறை ஆவணங்களையோ வாதி தாக்கல் செய்யவில்லை என்று தெரிய வருகிறது. வாதி வா.சா.ஆ.1–ன் மூலம் கிரயம் பெற்ற சொத்துக்கான சரியான சர்வே எண்.183/6J1 தான்



NAVEENA T
Digitally signed by NAVEENA T
Date: 2026.06.29 18:22:13 +0530

என்றும், வா.சா.ஆ.1–ல் குறிப்பிட்டுள்ள சர்வே எண்.183/1 என்பது தவறானது என்பதை, அவ்வாறான முந்தைய மூல ஆவணங்கள் மற்றும் வருவாய் துறை ஆவணங்கள் இல்லாத நிலையில், கிராம நிர்வாக அலுவலரின் வாய்மொழி சாட்சியத்தின் அடிப்படையில் மட்டும் தீர்மானிக்க இயலாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

7.2. மேலும், வாதி கடந்த 28.02.2017 தேதியில் தாவா சொத்துக்கான பட்டா மாறுதல் செய்ய குமாரபாளையம் வட்டாட்சியரிடம் மனு செய்த போது தான் மேற்படி பத்திரத்தில் சர்வே எண் பிழையாக உள்ளது என்று வாதிக்கு தெரிய வந்தது என்றும் கூறியுள்ள நிலையில், அவ்வாறு பட்டா மாறுதல் வேண்டி 28.02.2017 அன்று விண்ணப்பம் செய்ததாகவோ, மேற்படி விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதாகவோ, நிரூபணம் செய்ய வாதி தரப்பில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. வா.சா.1 மற்றும் வா.சா.2 வரையிலான வாய்மொழி சாட்சியங்கள் மற்றும் வா.சா.ஆ.1 சான்றாவனம் ஆகியவற்றின் அடிப்படையில், வாதி கோரியுள்ளவாறு வாதி வா.சா.ஆ.1 மூலம் கிரயம்



NAVEENA T
Digitally signed by NAVEENA T
Date: 2026.06.29 18:22:19 +0530

பெற்ற சொத்தானது சர்வே எண் 183/1–ல் இல்லை என்றும் சர்வே எண்.186/6J1–ல் தான் உள்ளது என்றும் இந்நீதிமன்றத்திற்கு போதுமான சாட்சிய, சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. அவ்வாறு, வாதி சர்வே எண்.183/6J1–ல் வா.சா.ஆ.1–ன் படி சொத்து கிரயம் பெற்றதாக நிரூபணம் செய்யாத நிலையில், வா.சா.ஆ.1–ல் சர்வே எண்.183/1 என தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றோ, சர்வே எண்.183/1 என இருப்பதை சர்வே எண்.183/6J1 என திருத்தம் செய்யப்பட வேண்டும் என்றோ, வா.சா.ஆ.1 பொறுத்து 1, 2 பிரதிவாதிகள் பிழை திருத்தல் பத்திரம் எழுதிக் கொடுக்க உத்தரவிட இயலாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, வாதிக்கு 1,2 பிரதிவாதிகள் பிழை திருத்தல் பத்திரம் எழுதிக் கொடுக்க கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைத்தக்கதல்ல என்று நீதிமன்றம் தீர்மானிக்கிறது. **எனவே, இவ்வாறாக எழுவினா தீர்மானிக்கப்படுகிறது.**

8. எழுவினா எண்.3–ற்கான தீர்வு:– ***வாதி கோரியுள்ள செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் கிடைக்கதக்கதா?*** 3–வது எழுவினா



NAVEENA T
Digitally signed by NAVEENA T
Date: 2026.06.29 18:22:26 +0530

பொருத்து தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதிகள் யாதெனில், வாதி கோரியுள்ளவாறு வா.சா.ஆ.1 பொருத்து 1, 2 பிரதிவாதிகள் பிழை திருத்தல் பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டுமா என்றும் அவ்வாறு பிழை திருத்தம் செய்யப்பட்ட பத்திரத்தை மூன்றாம் பிரதிவாதி பதிவு செய்து தர வேண்டுமா என்பதும் ஆகும். எழுவினா 1, 2–ல் நீதிமன்றம் வாதிக்கு வாதி கோரியவாறு 1, 2 பிரதிவாதிகள் வா.சா.ஆ.1 பொறுத்து பிழை திருத்தல் பத்திரம் ஏற்படுத்திக் கொடுக்க உத்தரவிட இயலாது என்று தீர்மானித்துள்ள நிலையில், அதன் தொடர்ச்சியாக, அவ்வாறு பிழை திருத்தம் செய்யப்பட்ட பத்திரத்தை பதிவு செய்யுமாறு 3–ம் பிரதிவாதியை செயலுறுத்த இயலாது என்று நீதிமன்றம் தீர்மானிக்கிறது. **எனவே, இவ்வாறாக எழுவினா தீர்மானிக்கப்படுகிறது.**

9. **<u>எழுவினா எண்.4–ற்கான தீர்வு</u>**:–*புல எண்.183/6J1 பொருத்து உரிமை விளம்புகை கோராமல் தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கதக்கதல்ல என்பது சரியா?* 4–வது எழுவினா பொருத்து தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதிகள் யாதெனில், சர்வே எண்.183/6 J1–ல் வாதிக்கு உரிமை உள்ளதாக வாதி விளம்புகை பரிகாரம் கோரி



NAVEENA T
Digitally signed by NAVEENA T
Date: 2026.06.29 18:22:33 +0530

இருக்க வேண்டுமா என்றும், அவ்வாறு விளம்புகை பரிகாரம் கோராததால் இவ்வழக்கு தீர்மாணிக்க இயலாதா என்பதும் ஆகும். வாதி வா.சா.ஆ.1 மூலம் கிரயம் பெற்ற சர்வே எண்.183/1 நிலத்திற்கும் பிழை திருத்தல் பத்திரம் எழுதிக் கொடுக்க கோரும் சர்வே எண்.183/6J1–ற்கும் எவ்வித தொடர்பும் சம்பந்தமும் கிடையாது என்று 1, 2 பிரதிவாதிகள் தங்கள் எதிர்வழக்குரையில் மறுத்தலித்துள்ள நிலையில், வாதி, சர்வே எண்.183/6J1–ல் தான் வா.சா.ஆ.1–ன் படி கிரயம் பெற்றதாகவும், சர்வே எண்.183/6J1–ல் வாதிக்கு உரிமை உள்ளதாகவும் விளம்புகை பரிகாரம் கோரிக்க வேண்டும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. **எனவே, இவ்வாறாக எழுவினா தீர்மானிக்கப்படுகிறது.**

**10. <u>எழுவினா எண்.5–ற்கான தீர்வு</u>:–** ***அவசிய தரப்பினரை சேர்க்காத காரணத்தால் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளதா?*** 5–வது எழுவினா பொருத்து தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதிகள் யாதெனில், 1, 2 பிரதிவாதிகள் கூறியுள்ளது போல், சர்வே எண்183/6J1–ற்கான பட்டா எண்.2168–ன் கூட்டு பட்டாதாரர்களான ரங்கசாமி கவுண்டர் மகன்



NAVEENA T
Digitally signed by NAVEENA T
Date: 2026.06.29 18:22:39 +0530

செங்கோடன், ரங்கசாமி கவுண்டர் மகன் சின்னசாமி மற்றும் தங்கவேல் மகன் தங்கமணி ஆகியோர் மற்றும் 3–ம் பிரதிவாதி கூறியுள்ளது போல் வாதியின் கணவர் வழக்கிற்கு அவசிய தரப்பினர்களா என்பதே ஆகும். வாதி தரப்பில், வாதியின் கணவர் ராஜவேல் அவர்களின் இறப்புச் சான்றிதழ் வா.சா.ஆ.2–ஆகவும், வாரிசு சான்றிதழ் வா.சா.ஆ.5–ஆகவும், வாதியின் குடும்ப அட்டை வா.சா.ஆ.3–ஆகவும், வாதியின் ஆதார் அடையாள அட்டை வா.சா.ஆ.4–ஆகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.5, ஆகியவற்றை பரிசீலனை செய்கையில் வாதியின் கணவர் ராஜவேல் அவர்கள், வாதியை மட்டும் தனது சட்டப்படியான வாரிசாக விட்டுவிட்டு கடந்த 13.02.1984 அன்று இறந்து விட்டார் என்று தெரியவருகிறது. எனவே, வாதியின் கணவர் வழக்கிற்கு முன்பே இறந்து விட்டபடியால், அவர் இந்த வழக்கில் அவசிய தரப்பினர் இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. வாதியோ பிரதிவாதிகளோ சர்வே எண்183/6J1–ற்கான பட்டா எண்.2168–ஐ தாக்கல் செய்யாத நிலையில் ரங்கசாமி கவுண்டர் மகன் செங்கோடன், ரங்கசாமி கவுண்டர் மகன் சின்னசாமி மற்றும் தங்கவேல்



NAVEENA T
Digitally signed by NAVEENA T
Date: 2026.06.29 18:22:44 +0530

மகன் தங்கமணி ஆகியோர், சர்வே எண்183/6J1–ற்கான கூட்டு பட்டாதாரர்களா என்பதையோ, அவர்கள் வழக்கிற்கு அவசிய தரப்பினர்களா என்பதையோ, தீர்மானிக்க இயலாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. **எனவே, இவ்வாறாக எழுவினா தீர்மானிக்கப்படுகிறது.**

**10. <u>எழுவினா எண்.6–ற்கான தீர்வு</u>:– *இருதரப்பினர்களுக்கும் கிடைக்கத்தக்க வேறு பரிகாரங்கள் என்ன?*** *வாதி கோரியவாறு பிழை திருத்தல் பத்திரம் ஏற்படுத்திக் கொள்ள இயலாது என்றும், வாதி கோரியவாறு செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும், தீர்மானத்துள்ள நிலையில், வாதிகளுக்கோ பிரதிவாதிகளுக்கோ வேறெந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கது அல்ல என்று நீதிமன்றம் தீர்மானிக்கிறது.* **எனவே, இவ்வாறாக எழுவினா தீர்மானிக்கப்படுகிறது.**

***11. முடிவு:***

***முடிவாக, தாவா தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவு தொகை இல்லை.***

என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் என்னுடைய மடிக்கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால்



NAVEENA T
Digitally signed by NAVEENA T
Date: 2026.06.29 18:22:50 +0530

பிழைதிருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026–ம் ஆண்டு ஜீன் மாதம் 29–ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய தீர்ப்பு பகரப்பட்டது.

NAVEENA T Digitally signed by NAVEENA T Date: 2026.06.29 18:23:00 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குமாரபாளையம்.

**<u>வாதிகள் தரப்பு சாட்சிகள்</u>:–**

வா.சா.1 – துளசி (எ) துளசிமணி (வாதி)

வா.சா.2 – திரு. தியாகராஜன், கிராம நிர்வாக அலுவலர், எலந்தக்குட்டை

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்:–</u>**

பி.சா.1 – சங்கர் (குமாரபாளையம் சார்பதிவாளர்)

**<u>வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:–</u>**

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 18.02.1983 | கிரைய ஆவணம் ஆவண எண்.343/1983 | அசல் |
| வா.சா.ஆ.2 | -- | ராஜவேலு என்பவரின் இறப்பு சான்றிதழ் | உண்மை நகல் |
| வா.சா.ஆ.3 | -- | குடும்ப அட்டை | நகல் |
| வா.சா.ஆ.4 | -- | ஆதார் அடையாள அட்டை | நகல் |

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.5 | -- | ராஜவேலு என்பவரது வாரிசு சான்றிதழ் | உண்மை நகல் |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:-</u>**

| | | | |
|---|---|---|---|
| பி.சா.ஆ.1 | -- | அதிகாரக் கடிதம் | சான்றிட்ட நகல் |
| பி.சா.ஆ.2 | -- | அடையாள அட்டை | நகல் |

NAVEENA T
Digitally signed by NAVEENA T
Date: 2026.06.29 18:23:15 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குமாரபாளையம்.

**அசல்/வரைவு**

**அ.வ.எண்.83/2020**

தேதி. 29.06.2026